# திராவிடன்


**அடுத்த வாரம**

அடுத்த வாரம் திராவிடன் இதழில் (4—4—59) அண்ணு அவர்கள். சட்டமன்றத்தில்—பட்ஜெட்விவாதத்தின் மீது பேசிய சொற்பொழிவு முழுவதும் 26—3—59 நகரசபைத் தேர்தல் முடிவுகளும் விரிவாக வெளிவரும்.

அதிக பக்கங்கள்
விலை: 25 காசு

# பெரியாருக்கு கூத்தரசன் மடல்!

பேரன்புமிக்க அய்யா அவர்களுக்கு, நலம் வேண்டுகிறேன். தாங்கள் வடநாட்டுச் சுற்றுப்பயணத்தை இனிதே முடித்து வெற்றியுடன் தாயகம் வந்து சேர்ந்தமைக்கு மனமார மகிழ்ச்சியடைந்தேன். தங்களின் வடநாட்டுப் பயணத்தால், காங்கிரசு கட்சிக்கு, திராவிடத்தில் எவ்வளவு எதிர்ப்பு இருக்கிறதென்பதையும், இன்றைய ஆட்சியாளரை மக்கள் எந்த அளவுக்கு வெறுக்கிருர்கள் என்பதையும் வடநாட்டு மக்கள் விரிவாகத் தெரிந்து கொள்ளும் வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது என்று கூறின் மிகையாகாது.

எனவே தங்களின் அரசியல் அல்லது பொதுவாழ்வுத்துறை சொல்லுக்கும், செயலுக்கும் இதுவரை இருந்துவந்ததைவிட அதிகமான மதிப்பும் அருத்தமும் வடநாட்டிலுள்ள மறுமலர்ச்சியாளர்களிடையே ஏற்பட்டிருக்கும் என்பதைத் தாங்கள் உணர்ந்திருப்பீர்கள் என்று நம்புகிறேன். ஆக தங்களின் அன்ருட சொற்பொழிவுகளை, திராவிடர் கழக செயல் முறைகளை, வடநாட்டு மக்கள் — அதாவது தங்களைப் பூரிப்புடன் வரவேற்றும் கருத்துரைகளை மதிப்புடன் செவிமடுத்தும் பெருமிதம் கொண்ட அந்நாட்டு மக்கள் மேலும் கூர்ந்துகவனித்து வரவேண்டிய சூழ்நிலை உருவாகியிருக்கிறது.

அதற்கேற்ப, வடநாட்டிலிருந்து தாயகம் வந்தவுடன் தாங்கள் பேசிய கூட்டங்களில் காங்கிரசை வன்மையாக அதுவும் தங்களுக்கே உரித்தான பாணியில் கண்டித்துப் பேசியிருக்கிறீர்கள். அப்பேச்சுக்களைப்படித்த காங்கிரசுக்காரர்களுக்கோ— அமைச்சர்களுக்கோ ஓரளவாவது மானுபிமானம் இருக்குமானுல் உங்களுடைய தொடர்பு அறவே வேண்டாம் என்ற திடமான முடிவுக்கு வருவார்கள். ஆனும் வர்க்கத்தினர் எப்படியோ தொலையட்டும்............

ஆனுல் காங்கிரசாரின் போக்கை இவ்வளவு வன்மையாகக் கண்டித்த தாங்கள் நகர சபைத் தேர்தல்களில் வாக்காளர்கள் காங்கிரசையே ஆதரிக்க வேண்டும் என்று கழக மேடைகளில் பேசுவதும், ஏட்டில் தீட்டுவதுமாகயிருப்பதைக்கண்டு வருந்துகிறேன்.

வருந்துகிறேன் என்று சொல்லுவதால், தி. மு. கழக அபேட்சகர்களுக்கு இதனுல் பாதகம் ஏற்பட்டுவிடும் என்ற எண்ணத்தால் அல்ல. தங்களிடமிருந்து எவ்வவளவு அதிகப்படியான எதிர்ப்பையும், வசவுகளையும் தாங்க முடியுமோ அவ்வளவையும் சென்ற பொதுத் தேர்தலில் நாங்கள் தாங்கிக் கொண்டவர்கள். யாருக்குத் துணை செய்ய வேண்டுமோ அவ்வித தொடர்புடைய என்னைப் போன்றவர்களுக்கு எதிராக காங்கிரசு முதலமைச்சருடன வீடுவீடாக வந்து ஓட்டுகளைக் கேட்டுத் தங்களின் முழு சக்தியையும் பிரயோகித்து எங்கள் மீது பாணம் தொடுத்ததையும்- சகித்துக் கொண்டோம்.

ஆக இவ்வளவு கடுமையான தாக்குதலையும், வசை மொழிகளையும் எதிர்ப்பையும் தாண்டிச் சென்றுதான் 17 இடங்களில் வெற்றிக்கண்டோம். ஆகவே நகர சபைத் தேர்தலில், காங்கிரசுக்கு ஓட்டுப்போடுங்கள் என்று அய்யா அவர்கள் சொல்லிலும், செயலிலும் இறங்குவதினுல் தி. மு. கழகத்திற்கு பெரும்நட்டம் அல்லது அபாயம் ஏற்பட்டுவிடும் என்ற எண்ணத்தாலும் அல்ல. இன்னும் சொல்லப்போனுல், 11—3—59 அன்று நடைபெற்ற தேர்தலில் பல நகர சபைகளில் தி. மு. கழகம் குறிப்பிடத்தக்க வெற்றிகளைக் கண்டிருப்பதை அய்யா அவர்கள் உணர்ந்திருப்பீர்கள் என்று நம்புகிறேன்.

நகரார்ண்மைக் கழகத்திலோ சட்டமன்றம்,பாராளுமன்றம் ஆகியவைகளிலோ இடம்தேடிக்கொள்வதுதான் தி.மு. கழகத்தின் திட்டம் என்று எண்ணம்கொண்டு தி. மு. கழகத்தில் சேருபவர்கள் ஏமாற்றம்தான் அடைவார்கள். நகரசபைகளிலும் சட்டமன்றங்களிலும் இடம்பெறுவது மட்டுமே தி. மு. கழகத்தினரின் நோக்கம் என்ருல், அய்யா அவர்களே பல கூட்டங்களில் சொல்லியிருக்கி



றீர்கள். "என்ன இந்த மந்திரி பதவி வேண்டுமென்ருல் இங்கிருந்தபடியே நேருபண்டிதரிடம் போன் மூலமாக பேசியே பெறமுடியும். நான் என்ன எனது கார் டிரைவருக்கு ஒரு மந்திரி பதவி கொடுக்கவேண்டும் என்று கேட்டால் கூட ஒன்று என்ன இரண்டு மூன்று பேர்களுக்கு வேண்டுமானுலும் தருகிறேன் என்று கூறுவார் நேரு. அந்த அளவுக்கு மிகச்சாதாரணமாகி விட்டது இப்போது மந்திரி பதவி என்பது—மந்திரி பதவியே இப்படியென்ருல் சட்டமன்ற உறுப்பினர் பதவியைப்பற்றிச் சொல்லவும் வேண்டுமா ?—என்று !

ஆகவே சட்டமன்ற உறுப்பினர்—அல்லது நகரசபை உறுப்பினர் பதவிகள் பெறுவ
எங்களின் இலட்சியம் எ
காங்கிரசிலேயே சேர்ந்து
அல்லது காமராசா
பாடிக் கொண்டிருக்க
கள் பெறுவதற்கு இ

வழியென்பதை அய்யா அ
களே ஒப்புக்கொள்வீர்கள்.

ஆகவே தி. மு. கழகம்
மன்றம் — நகராண்மைக்
ஆகியவைகளில் போட்டியி
தென்ருல், பல துறைகளி
ஆளும் கட்சியினரின் அ
களை எடுத்துக்காட்டிக் கண்டி
கவும் நமது கொள்கைக்கு மக்
ளின் பேராதரவைத் திரட்டவுமே
யாகும் என்பதை எங்கள்மீது
கோபத்தால் வேண்டுமா
வெளிப்படையாக ஒப்புக்கொ
மறுத்தாலும் உங்களின்
சாட்சி அந்த உண்மையை
வப்போது எடுத்துக்கூறும்
பதை நான் இட்டவட்டமாக
வேன்.

மாற்ருர்கள் ஆசைபடுவது போல நகரசபைத் தேர்தல்களில் தி. மு. கழகத் தோழர்கள், எதிர்பார்க்கும் வெற்றி கிடைக்கவில்லையென்று வாதத்துக்கு வைத்துக் கொண்டாலும் அதனுல் கழகம் அழிந்துவிடாது. அப்படி அழிவதாயின், சட்டமன்றத் தேர்தலில் 117 இடங்களுக்குத் தி. மு. கழகம் போட்டியிட்டதில் 100இடங்களில் வெற்றிபெற இயலவில்லை. ஆனுல் கழகம் அதற்குப் பிறகு மேலும் வலுப்பெற்று வளர்ந்து வருகிறது. தேர்தல்—பதவி ஆகிய
கள் மட்டுமே நோக்கமாகக் கொ
கட்சிகள் வேண்டுமானுல், தேர்
தோல்வியென்ருல் அதோடு அக்
யும் புதைந்துவிடும். வேண்டும
கழக வளர்ச்சியைக் கண்டு இது,
சமயம் நமது நப்பாசையை நிறை
றிக் கொள்ளலாம் என்று
வெறி பிடித்து கழகத்
யாராவது சேர்ந்தால், அவ்வித
வழிகள் தேர்தலில் தோல்வியெ
கட்சியை விட்டு இன்னெரு கட்சி
தாவும்இழித்தன்மையில்உழன்றுகொ
டிருப்பார்களே தவிர, கழகவள
மட்டும் எவ்வகையிலும் தளர்ச்சியு

இதற்குக் காரணம் எ
தி. மு. கழகம் ஏதோ
அரசியல் அதிகாரத்தை
பற்றும்
டாச்

## ஏஜெண்டுத் தோழர்களுக்கு

வணக்கம். மார்ச்சு மாதம் முடிய பட்டியல் தொகை அனுப்பப் ட்டுள்ளது. உடன் தோழர்கள் அதற்கான நிலுவையை அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

— நிர்வாகி: 'திராவிடன்'


# திராவிடன்

ன்னை | 28—3—59 | சனிக்கிழமை


# ஆச்சாரியாரின் அபாய அறிவிப்பு!

நாட்டு ஏகாதிபத்தியத்தின் கொடுமைகளையும் தங்களிடத் ந்தியத்துணைக்கண்டத்தின் அரசியல் பிடி சிக்கிவிட்டதால், சர்க்கார் நம்தாயகத்திற்கு இழைத்துவரும் அநீதிகளையும், விட முன்னேற்றக் கழகம், அவ்வப்போது எடுத்துக்காட்டிக் த்து, டெல்லிப் பிடியிலிருந்து நம்நாடு விடுபடவேண்டும் ற கொள்கைக்காகத் தீவிர பணிகளிலும் ஈடுபட்டுவருகிறது. த விவரங்களை அரசியல் விவேகம் படைத்த, நம் நாட்டிலுள்ள பெரியவர்கள் மனதார உணர்ந்தாலும், டெல்லி ஆதிக்கத்திலி நம் தாயகம் விடுபடவேண்டும் என்ற உயரியகொள்கையை ப்படையாகத் தெரிவிக்கவும், அதற்கேற்ப செயலாற்றவும் கின்றனர். ஆனால் இவர்கள் அங்குமிங்குமாக நின்று முணு ப்பதில் மட்டும் குறைச்சலில்லை. அத்தகையோரில் முதல் வகிப்பவர், உயர் திரு. சக்ரவர்த்தி இராசகோபாலாச்சாரி ன்று கூறின் மிகையாகாது.

இன்றைய இந்திய அரசியல் சட்டப்படி அல்லது "சுயராஜ்ய மை"ப்படி டெல்லி ஆதிக்கக்காரர்களின் பேராசைக்கு, ஊதாரித் னமான செலவுகளுக்கு நமது மாநிலத்தின் வளமும் மக்களின் த்தான உழைப்பின் பலனும் அளவுக்கு மீறிய வரிகளும் அள்ளி டுத்துச்செல்லப்படுகிறது. இவ்வளவும் போதாதென்று ஏறத் ழ 1690 கோடி ரூபாய் மதிப்புள்ள நோட்டுகளை அச்சடித்து வெளியிட்டிருக்கிறது மத்திய சர்க்கார். நாள் ஒன்றுக்கு சுமார் இரண்டரை கோடி ரூபாய் வீதம் கடந்த இரண்டு வாரங்களுக்கு முன் 17 கோடி ரூபாய்க்கு டெல்லி சர்க்கார் நோட்டுகளை அச்சிட்டு புழக்கத்திற்குக் கொண்டு வந்துள்ளனர்.

வெளிநாடுகளிலிருந்து கோடிக்கணக்கான டாலர்கள் கடன் கப்பட்டு வருகிறது. இதுவும் போதாதென்று சிறுசேமிப்பு பெயரால், ஏழை—எளிய மக்களிடத்தில் பணம் உறிஞ்சப் தாக சட்டமன்றத்தில் சர்க்கார் மீது குற்றம் சாட்டிக்கண்டிக் டிருக்கிறது.

ஆக இவ்வளவு கோடிக்கணக்கான பணத்தைக்கொண்டு நேரு ர் ஐந்தாண்டுத் திட்டங்கள் என்ற பெயரால் செலவழித்து ன்றனர்! இந்தத் திட்டங்கள் எந்த வகையில் செயல்படுத் கிறது—அதில் எவ்வளவு பணம் பாழாகி வருகிறது என் யெல்லாம் நாம் அவ்வப்போது எடுத்துக்காட்டி வந்திருக்கி இந்திய அரசியலாரின் ஐந்தாண்டுத் திட்டங்களில் முக்கிய வகளை வடநாட்டு மாநிலங்களிலேயே நிறைவேற்றப்பட்டு ன்றன. அதிலும்கூட ஐம்பது சதவிகிதம் பணம் பாழாகி தாகத் தெரியவருகிறது.

எனவே மத்திய சர்க்காரின் பட்ஜெட் மக்களையே விழுங்கி விடும் வகையில் இருக்கிறதென்பதை நாம் இரண்டு வாரங் முன் விவரித்திருந்தோம். ஆக வடநாட்டின் ஏகபோக வாழ் நம் நாட்டின் வளமும், வரிப்பணமும், சுரண்டப்பட்டு, ...சியில் இந்தியத் துணைக்கண்டத்தின் வளமும் சுரண்டப்பட்டு வருகிறது. இங்கிலாந்து ...பாது நடைபெறும் பனியா ஆட்சியில், நம் ...மயாகி, வடநாடு குபேரபுரியாகிறது.

...மக்களின் அனுமதியில்லாம ...தல் இல்லாமலேயே, ...ந்துக்காட்டி அடமானம் ...வாங்கியிருக்கின்றனர் ...ல் நமது அரசு ஒட் ...ல. அரசு ஓட்டாண் ...பேரிடி விழுந்தது ...ஒப்புக்கொள்வர்.

இவ்வித அநீதிகளைத்திராவிட முன்னேற்றக்கழகம் எடுத்து கூறி அவைகளைத் தகர்த்தெறிய முனையும் போது, நாட்டில் அரசி யல் விவேகத்தில் மிகுந்தவர்களாகவுள்ள பெரியவர்களுக்கு அக் கறையிருப்பதில்லை. அந்த சமயங்களிலெல்லாம் உலுத்துப்போன வேதாந்தங்களைப்பற்றி பேசிக்கொண்டிருப்பதும், அது தங்களின் மேதாவித்தனத்துக்கு ஓர் எடுத்துக்காட்டாகும் என்ற எண்ணத்தி லும் காலத்தை வீணாக்கி வந்துள்ளனர். அத்தகைய பெரியவர் களில் முதல்வரான திரு. இராசகோபாலாச்சாரியார் அவர்கள் 18—3—59 அன்று சென்னை கோகலே மண்டபத்தில் "மத்திய சர்க் கார் பட்ஜெட்" என்ற தலைப்பில் பேசியுள்ளார் கூர்ந்து கவனி யுங்கள் :—

> "பட்ஜெட் தயாரிப்பில் இந்திய அரசியலார் பின்பற்றும் கொள் கையின் காரணமாக நாடு ஓட்டாண்டியாகிக்கொண்டிருக்கி றது. ஐந்தாண்டுத் திட்டங்களில் சில இனங்கள் நிறுத்தப் பட்டாலொழிய நிதி நிலை ஒழுங்குபடாது. இந்த நிலையில் திட்டத்தை ஆட்சேபிக்க நமக்கு உரிமையில்லையாம்! திட்டத் தை ஆட்சேபிக்காமல் பட்ஜெட்டை ஆட்சேபிக்க முடியாது. ஐந்தாண்டுத்திட்டங்கள் என்பது நமது சாமானிய புத்திக்குப் புலப்படாத மாதிரியாகிவிட்டது. அதாவது கடவுளைப்போன்ற தாகிவிட்டது. கடவுளைக்குறைகூறவோ, திருத்தவோ நம்மால் இயலுமா? ஆதலால்தான் பொதுமக்கள்பேசாமடைந்தகளாகயி ருக்கிறார்கள்! எனினும் சரியோ தவறோ இனிதிரிஹரண சுத்தியுடன் பேசுவதற்கான காலம் வந்துவிட்டது என்று நான் எண்ணுகிறேன். மக்கள் இந்த அநீதிகளை எதிர்த்தாலொழிய சர்க்கார் திருந்தமாட்டார்கள்' மக்க ளிடையே ஏமாற்றமும் ஏக்கமும்தான் ஓங்கி நிற்கின்றன. இந்த அபாயத் திலிருந்து மீட்கவேண்டியது எனது கடமையென்பதை உணருகிறேன். வெறும் கரன்ஸி நோட்டுகளை அச்சடித்து தள்ளிக்கொண்டே காலத்தைக் கடத்தும் மத்திய சர்க்காரின் போக்கினால் நாடு ஓட்டாண்டியாகும் இருள், சூழ்ந்துவிட்டது.

ஆச்சாரியார் அவர்களின் பேச்சில் உள்ள சாரம் இது. டெல்லி ஆதிக்கக்காரர்களின் அநீதியை எதிர்க்கவேண்டும் என்பதை இப் போதுதான் ஆச்சாரியார் திரிஹரண சுத்தியுடன் (தூய்மையுடன்) உணர்ந் திருக்கிறாராம்! இத்தனை காலமாக எதிர்ப்பதைப்போல நடித்து வந்தாரோ...அறியோம்!

கடந்தகால சம்பவங்கள் எவ்வாறிருப்பினும் ஆச்சாரியார் அவர் களுக்கு ஏற்பட்டுள்ள இந்த திரிஹரண சுத்தியாகிலும் நீடித்திருக்க வேண்டுமென்று ஆசைப்படுகிறோம்.

ஏதோ தாமும் அரசியல் உலகில் இருப்பதை எந்த வழியிலாகி லும் உலகுக்குத் தெரிவித்தாக வேண்டும் என்ற விளம்பரத்திற் காக மூன்று திங்களுக்கொருமுறை பந்தோபஸ்தான இடத்தில் அமர்ந்து கொண்டு அரசினரின் அநீதிகளை எடுத்துச் சொல்லும் போக்கில் ஆச்சாரியார் மேலுங் காலத்தைக் கடத்துவாரானால், மத் திய சர்க்கார் செய்யும் அநீதியைவிட ஆச்சாரியாரின் போக்கு நம் தாயகத்திற்கு பேராபத்தை விளைவிக்கக் கூடியதாகயிருக்குமோ —என்று மக்கள் ஐயுறவேண்டிய நிலை ஏற்பட்டுவிடும்.

எனவே "சீஸன் காலத்து அரசியல் வாதிகள்" பட்டியலிலே ஆச்சாரியார் இடம்பெறும்லிருக்க வேண்டுமானால், டெல்லி ஆதிக் கத்தின் கொடுமைகளைத்தகர்த்தெறியதீவிரமாக முனையவேண்டும்.

ஆச்சாரியாரின் அறிவாற்றலில், அரசியல் விவேகத்தில் அனை வருக்கும் எப்போதுமே மதிப்புண்டு, அதேசமயத்தில் அவர் தந்திர சாலி, எதிர்ப்புயென்றால் மற்றவர்களை விட்டு ஆழம்பார்த்து, தம் வரை கஷ்ட நஷ்டங்களிலிருந்து ஒதுங்கிவிடுவார், அதுமட்டுமல்லா மல் எதிரிகளின் வரிசையிலேயும் நின்றுவிடுவார்—அபாயகரமான மனிதர்—என்று அவரைப்பற்றி மற்ற தலைவர்களும், மக்களும் கொண்டுள்ள எண்ணத்தை ஆச்சாரியாருக்கு வெளிப்படையாக நினைவூட்டுகிறோம்.

அந்த மாசு மறையவேண்டுமானால். தமது எஞ்சியுள்ள காலத்தை திரிஹரணசுத்தியாகப் பயன்படுத்தவேண்டுமென்று தெரி வித்துக்கொள்கிறோம்.

அந்த உறுதிப்பாடு, ஆச்சாரியாருக்கு இல்லையெனில் மற்ற படி தர்மோபதேசங்களைச் செய்து கொண்டிருந்தால் இறுதிக் காலத்தில் மோட்சலோசத்தில் ஒரு இடமாகிலும் ரிசர்வ் செய்து வைப்பதற்கு உதவியாயிருக்கக்கூடும்.

எனவே ஆச்சாரியார் திரிஹரணசுத்தியுடன் இனி கடமையாற்று வது உண்மையானால், வடநாட்டு ஆதிக்கத்தைத் தட்டிக்கேட்டு, நம் தாயகத்திற்கும் பொதுவாக மக்களின் நல்வாழ்வுக்குமான உரிமையைப்பெற முன்நிற்கவேண்டும்.

அதைவிடுத்து என்றைக்கோ ஒருநாள் கோகலேமண்டபத் தில் நின்று அரசினரின் அநீதிகளைப்பற்றி காரசாரமாகப் பேசி விட்டுச்செல்லும் "Fashion Politician" போக்கில் ஆச்சாரியார் அவர்களின் நடவடிக்கை இருக்குமானால், அதுவே நம் மாநிலத் துக்கு ஓர் அபாயமாகயிருக்குமோ அவரது உள்எண்ணம் எது வாகயிருக்குமோ யென்று இந்நாட்டு மக்களும், குறிப்பாக ஆச்சாரி யாரை அறிந்தவர்களும் ஐயுறவேண்டியிருக்கும் என்பதை மீண்டும் அந்த முதியவருக்குப் பணிவன்புடன். நினைவூட்டு கிறோம்.

# திட்டமும், பலனும்!

முதல் ஐந்தாண்டுத் திட்டத்தை வெற்றியுடன்(!) முடித்து விட்டோம். இதோ இரண்டாம் திட்டம் முடியுங்கட்டத்திலிருக்கிறது; மூன்றாவது திட்டத்திற்கான பேச்சுகள் ஆரம்பமாகிவிட்டது" என்றெல்லாம் காங்கிரஸ் தலைவர்கள் பெருமையோடு பேசுகிறார்கள்!

ஆனால் திட்டங்களினால் நாட்டுக்குக்கிடைத்த நன்மை என்ன? மக்கள் வாழ்வில் வளம் பெருகிற்றா?

இந்தக்கேள்வியை நாம் எழுப்பும்போது "காங்கிரசுக்காரர்கள்" எளிதாகப் பதில் சொல்லிவிடுகின்றனர்—ஆமாம்! எதிர்க்கட்சியினர் இவர்களுக்கு குறைகள் தான் கண்ணுக்குத் தெரியுமே தவிர செய்திருக்கிற நன்மை தெரியாது! எதிர்க்கட்சிகளின் கூற்றுக்களிலே பொருள் இல்லை-கருத்து இல்லை. வீண்கூச்சல் அவ்வளவுதான் — என்பதாகப் பதிலிறுத்து விடுகின்றனர்! நாம் திட்டத்தின் 'ஆகாத்தன்மையை' எடுத்துக்காட்டும் போது புறப்படும் பதில்தான் இது.

ஆனால் இதே கேள்வியை 'நாம்' அல்ல—நடுநிலைமையாளர் ஒருவர் முற்றும் துறந்த முனிவர் நிலையிலே இருக்கிற ஒருவர் கேட்டால் என்ன பதில் சொல்லப்போகின்றனர்!

திட்டத்தால் [illegible]ண்ட பலன் என்ன?

கேள்வியை எழுப்பியிருப்பவர் வேறு யாருமல்ல "வினோபாபவே" அவர்கள்தான்! "பவே" சாதாரணமான மனிதர் அல்ல! காட்சிக்கெளியர்—அன்பு கனிந்தவர் ஏழைகளுக்கு உதவுவதே சிறந்த தொண்டு என "பூமிதானக்" கொள்கையைக் கடைப்பிடித்து-கால்நடையாகவே நாடு, நகரம், பட்டி, தொட்டி எல்லாம் சென்று பரப்பி வருபவர்!

"காங்கிரசுக்காரர்கள்" அவர் தொண்டைப்பற்றி வர்னளாவப் பேசாத நாளில்லை எனலாம்! காட்டுத்தலைவர் "பாபு ராஜேந்திர பிரசாத்' அவர்கள்கூட "பாவே"யைச்சந்திப்பதே பெரிய புண்ணியம் எனக் கருதுபவர்! 'பாவே'யின் முன்னர் 'பாபு ராஜேந்திரர்' நம்மை யாளும் தலைவர் குனிந்து—பணிந்து அடக்க ஒடுக்கமாக நடந்து கொள்ளக்கூடியவர்!

ஏன்? ஆசிய சோதியாம் 'நேரு' அவர்கள்கூட பல பிரச்சினைகளில் அவரைச்சந்தித்துவிபரம் கேட்பார். இப்படி காங்கிரசு மேலிடத்தினரும், கீழிடத்தினரும் ஒரேயடியாகப் . பணிந்து போற்றற்கு ஏற்றவரும், அவரது தொண்டை சிறந்தது எனப் பாராட்டி ஒத்துழைப்பு அளிக்கக் கூடியவரும் ஆன வினோபாவே தான் காங்கிரசுக்காரர்களின் ஐந்தாண்டுத்திட்டங்களால் கண்ட நன்மை என்ன என்ற கேள்வியை எழுப்பியிருக்கிறார்.

காங்கிரசுக்காரர்கள் இதற்கு என்ன பதில் சொல்லப் போகின்றனரோ யாம்அறியேனல்லோம்! ஆனால் ஒன்று மாத்திரம் உறுதியாகக் கூறமுடியும். அதாவது 'திட்டத்தினால் பலன் ஏற்படவில்லை. என்ற கருத்தை மாத்திரம் 'பவே' அவர்கள் திட்டவட்டமாகவும், உறுதியாகவும் கூறியுள்ளார்கள்.

பொதுவாக முதலாவது ஐந்தாண்டுத்திட்டம் பூர்த்தியாக்கப் பட்டுவிட்டது என்று கூறப்படுகிறது. ஆனால் உண்மையில் திட்டத்தில் குறிப்பிட்டுள்ள வருடங்கள்தான் முடிந்திருக்கிறதே தவிர; திட்டத்தில் கூறப்பட்டுள்ளவைகள் முடிக்கப்படவில்லை" (It is generally said that first five year plan is completed. But what is completed is in fact the plan period and not the plan target)

முதல்திட்டத்தின் அவலநிலையைப் படம் பிடித்துக்காட்டி விட்டு, இரண்டாம் திட்டம்பற்றி குறிப்பிடும் போதும் ஒன்றும் ஆகவில்லை என்றே கூறுகிறார்!

சர்க்கார் இரண்டாம் திட்டத்திற்கென்று மொத்தமாக 4800 கோடி செலவழித்து—அதாவது வருடத்திற்கு 960 கோடி ரூபாய் வீதம் செலவிட்டு, இன்னும் சொல்லப்போனால் மாதம் ஒன்றுக்கு 80 கோடி ரூபாய் என்று செலவு செய்து ஏன் தினம் $2\frac{1}{2}$ கோடி ரூபாய்வீதம் செலவழித்தும் நாட்டுக்கு நன்மை எதுவும் ஏற்படப்போவதில்லை என்கிறார்!

இவ்வளவு கோடிப்பணங்களை, வரிகள்மூலம் நாட்டுமக்களை வாட்டிப் பெற்றும், வெளிநாட்டினரிடம் உயர்ந்த வட்டியில் கடன் பெற்று திரட்டியும்; திட்டத்திற்காக கொட்டிச் செலவழித்தும்—நன்மை இல்லையென்றால் அதற்குக்காரணமென்ன? இதற்கும் 'பவே' அவர்கள் விடை தந்திருக்கிறார்கள்.

இத்திட்டத்தின்மூலம் யாருக்குத் தேவையிருக்கிறதோ அவர்களுக்கு நன்மை ஏற்படவில்லை. (Those who are in need are not getting the benefit of the plan) என்பதுதான் பவேகாட்டும் கருத்தாகும்.

காங்கிரசுக்காரர்களின் திட்டத்தின்செயலாக்கம்எப்படியிருக்கிறதென்றால் தண்ணீர்த்தாகமுள்ளவனுக்குத் தண்ணீர்அளிக்காமல்

**ச.வெ. பாண்டியன்**

தாகம் இல்லாதவனுக்குஓட்டைக் கையில் ஊற்றி, தண்ணீரைக் காலி செய்வது போலிருக்கிறது. என்பதாகப் 'பவே' அவர்கள் தக்க விளக்கத்துடன் கூறுகிறார்கள்.

வேலை வேண்டுமா?

உணவு வேண்டுமா?

ஊதிய உயர்வு வேண்டுமா?

இப்படி வேண்டுமா என்ற கேள்வியை மக்களிடம் எழுப்பி விட்டு எல்லாவற்றிற்கும் திட்டங்களைக் காட்டுவார்கள் — ஆளும் கட்சியினர்! எதற்கெடுத்தாலும் திட்டம்போட்டிருக்கிறோம் ஒத்துழையுங்கள் என்று மாத்திரம் கூறத்தவறுவது கிடையாது, ஆனால் திட்டத்தின் லட்சணம் 'பவே' காட்டுகின்ற பலனளிக்காத முறையில்இருக்கிறது!

திட்டம் பலனளிக்காமைக்குக் காரணம் திட்டம் மக்களின் ஒத்துழைப்பைபெறவில்லைஎன்பது மாத்திரமல்லாமல் அதில் பல ஓட்டைகள்—அதுவும் "வேண்டுமென்றே செய்த பல ஓட்டைகள்" இருக்கின்றன என்றும் 'பவே' சுட்டிக்காட்டுகிறார்கள்!

கிணற்றிலே தண்ணீர் எடுக்கிறோம் — வாளியின் உதவி கொண்டு. ஆனால் பாத்திரத்தில் நாலைந்து பெரிய ஓட்டைகள் இருந்தால் அதில் தண்ணீர் நிரம்புவது எப்போது? திட்டம் திட்டம்என்றுகூறி கொட்டியளிக்கும் பணம் இப்படித்தான் வீணாக்கப்படுகிறதே தவிர நன்மையான காரியங்களுக்கு இவைகள் பயன் படுத்தப்படவில்லை என்கிறார்—பவே!

பாவேயின் கூற்றை யார் மறுக்கமுடியும்? உள்ளதை உள்ளபடி பிய்த்து வைக்கிறார் அவ்வளவுதான்.

ஓட்டைகள் என்று [illegible] டார்கள் அல்லவா[illegible] ஓட்டைகள் [illegible] மென்றே ஏற்[illegible] ஓட்டைகள்? மு[illegible] னுவத்திற்கா[illegible] க்கு 300 கோடி [illegible] யளப்பதுமுதல் [illegible] இரண்டாவதாக நிர்வா[illegible] விற்கென்று வருடா வருட[illegible] 200 கோடி ரூபாய் செலவிடுவ[illegible] மூன்றாவதாக வெளிநாட்டிலி[illegible] ந்து உணவு இறக்குமதி செய்வதற்காக வருடம் 100 கோடி ரூபாய் இழப்பது இப்படிப் பல ஓட்டைகள் இருக்கின்றன். இந்தப்பணத்தை இழந்துவிட்டுத் தான் திட்டம் செயலாக்கப்படுகிறது. இதனால் திட்டப்பணத்தின் பெரும்பகுதி இதற்கே செலவாகிவிடும்போது திட்டம் எப்படி உரிய பலன் அளிக்கும்? இதுதான் பவே அவர்கள் காட்டும் குற்றச்சாட்டுகளாகும்!

திட்டத்தின்மூலம் தேவையுள்ளவர்களுக்கு நன்மை இல்லை.

திட்டம் விழலுக்கிறைத்த நீராகும்.

600 கோடி ரூபாய் வீணாக வருடாவருடம் செலவழிக்கப்படுகிறது.

இத்தனை குறைகள்—ஓட்டைகள்! ஆனால் காங்கிரசுக்காரர்கள் 'திட்டம் திட்டம்'என்றுபெரு[illegible] பேசாத நாளில்லை இதோ [illegible] ரும் திட்டத்திற்கு ஆரம்ப[illegible] கள் துவங்கப்பட்டு வி[illegible] என்ற செய்திகளும் நமது [illegible] விழாமல் இல்லை?

'கர்ங்கிரசு' நண்பர்களே உ[illegible] கள் பதில் என்ன?

●

முக்கிய அறிவிப்பு :- குரு பல்பொடி புதிய அச்சுடின்களிலேயே விற்பனைக்கு அனுப்பிவருகிறோம். பழைய டின்களில் தயாரிப்பு நிறுத்தப்பட்டு விட்டபடியால் பழைய குருபல்பொடி டப்பாக்களை வாங்காதீர்கள்.

# தூத்துக்குடி நமது கோட்டைதான்!

கடந்த 1958 ஜூலைத் திங்கள் 15-ல் நடைபெற்ற சென்னை சட்டமன்ற இடைத் தேர்தலில், அதிகார பலத்தையும் பணபலத்தையும் துணையாக கொண்டு காங்கிரஸ் போட்டியிட்டது. பணபலத்தையும ஜாதிப்பித்தையும் பக்க பலமாகக் கொண்டு கம்யூனிஸ்ட் கட்சி போட்டியிட்டது. பிரச்சார பலம் ஒன்றையே தன் தேர்தல் ஆயுதமாக வைத்து தி.மு. கழகம் போட்டியிட்டது.

தேர்தல் முடிவில் காங்கிரஸ் முதன்மையாகவும், கம்யூனிஸ்ட் கட்சி இரண்டாவதாகவும், நாம் மூன்ருவதாகவும் வாக்குகளைப் பெற்ருேம். முதன்மையாக வந்த காங்கிரஸ்காரர்கள் தேர்தலில் வெற்றிபெற்றுங்கூட அப்பிரச்சினையை மறுபடியும் கிளப்பி வீண் சர்ச்சை செய்யாமல் மௌனமாக இருந்துவிட்டது.

ஆனல் பணத்தையும், ஜாதிப்பித்தையும் அவிழ்த்துவிட்டு அதன் மூலம் இரண்டாவது ஸ்தானத்தைப் பெற்ருேம் என்பதை மறந்து கம்யூனிஸ்ட்கட்சி தன் 'ஜனசக்தி' ஏட்டில் தூத்துக்குடியில் தி.மு. கழகம் அழிந்துவிட்டது என்றும், செல்வாக் [illegible] என்றும், கம்யூனிஸ்டு [illegible]ண்டாவது இடத்தை [illegible]விட்டது என் [illegible] கட்டுரை எழுதி [illegible] செய்த புரளியை [illegible] மறந்திரு[illegible]

[illegible]னல் சமீபத்தில் நடைபெற்று முடிந்த நகரமன்ற தேர்தலில் அவர்கள் பெற்ற படுதோல்வியின்மூலம், தூத்துக்குடியில் கம்யூனிஸ்ட் கட்சியின் சுய பலத்தை சுய உருவை தோலுரித்துக்காட்டிவிட்டார்கள் தூத்துக்குடி மக்கள் என்பதை, கீழ்க்கண்ட புள்ளி விவரங்கள்மூலம் நன்கு தெரிந்துகொள்ளலாம்.

நகரமன்ற தேர்தலில் காங்கிரஸ் 25 அபேட்சகர்களை நிறுத்திற்று. தி.மு. கழகம், கழக சின்னத்தில் 10 அபேட்சகர்களையும் சுயேட்சை சின்னத்தில் 7 அபேட்சகர்களையும் நிறுத்தியது. கம்யூனிஸ்ட் கட்சி கட்சியின் சார்பாக 12 சுயேட்சகர்களையும், (சுயே)யாக 5 அபேட்சகர்களையும் நிறுத்தியது ஜனநாயககாங்கிரசு 5 அபேட்சகர்களை நிறுத்தியது. 25 அபேட்சகர்களை நிறுத்திய காங்கிரஸ் 16 இடங்களில் வெற்றி பெற்று 64 சதவீதம் வெற்றி பெற்றது. 17 அபேட்சகர்களை நிறுத்திய தி. மு. கழகம் 10 இடங்களில் வெற்றிபெற்று 59 சதவீதம் வெற்றி பெற்றது. 5 இடங்களில் அபேட்சகர்களை நிறுத்தி 1 இடத்தில் மட்டும் வெற்றிபெற்ற ஜனநாயக காங்கி[illegible]ஸ் 20 சதவீதம் வெற்றி பெற்[illegible]து. ஆனல் 17 இடங்களில் [illegible]ாட்டியிட்டு 2 இடங்களில் வெற்றிபெற்று. 12சதவீதவெற்றி பெற்று கடைசி ஸ்தானத்தை அடைந்தது பரிதாபத்துக்குரிய கம்யூனிஸ்ட் கட்சி,

**வெற்றி பெற்ருேர் விவரம்**

| வட்டம் | பெயர் | வாக்குகள் |
|---|---|---|
| 1 | ஏ. அய்யாச்சாமி | 839 |
| 9 | பி. சண்முகம் | 428 |
| 11 | வி, பி. ஆர். சிதம்பரம் | 962 |
| 11 (பெண்) | ஜே. ஜெபமணி அன்னம்மாள் | 1017 |
| 18 | எம். எஸ். சிவசாமி | 1053 |
| 21 | கே. ஆர். ராமலிங்கம் | 1175 |
| 22 | ஒ. வி. ராஜா | 963 |
| 25 | செல்வராஜ் | 737 |
| 26 | சி. காசி | 1480 |
| 26 (பெண்) | எம். தங்கவேலம்மாள் | 1311 |

மொத்தம் 10 ஸ்தானங்கள்

கடந்த இடைத் தேர்தலில் தூத்துக்குடி நகரத்திலுள்ள 29 வார்டுகளிலும், காங்கிரஸ் கட்சி 15000 வாக்குகளும், கம்யூனிஸ்ட் கட்சி 12000 வாக்குகளும், தி. மு. கழகம் 11000 வாக்குகளும் பெற்றன.

ஆனல் இப்பொழுது நடைபெற்ற நகரமன்ற தேர்தலில் காங்கிரஸ் கட்சி 24 வார்டுகளில் போட்டியிட்டு 15816 வாக்குகள் பெற்றிருக்கின்றன. தி.மு.கழகம் 17 இடங்களில் போட்டியிட்டு 12709 வாக்குகள் பெற்றிருக்கின்றது. கம்யூனிஸ்ட் கட்சி 17 இடங்களில் போட்டியிட்டு 8269 வாக்குகள் பெற்று கடைசி ஸ்தானத்தைப் பெற்றிருப்பதிலிருந்து, கடந்த இடைத்தேர்தலில் கம்யூனிஸ்ட் கட்சிக்கு கிடைத்த வாக்குகள் ஜாதிப்பித்தாலும், பண பலத்தாலும் கிடைத்தவாக்குகள் என்பது நன்குநிரூபணமாகிறது.

17 இடங்களில் போட்டியிட்ட தி.மு.கழகத்துக்கு 12709 வாக்குகளில் சராசரி ஒவ்வொரு அபேட்சகருக்கும் 747 வாக்குகள் கிடைத்திருக்கிறது. 24 இடங்களில் போட்டியிட்டு 15816 வாக்குகள் பெற்ற காங்கிரஸ் அபேட்சகர்களுக்கு சராசரி ஒவ்வொருவருக்கும் 659 வாக்குகள் கிடைத்திருக்கின்றது. 17 இடங்களில் போட்டியிட்டு 8269 வாக்குகள் பெற்ற கம்யூனிஸ்ட் கட்சிக்கு சராசரி 487 வாக்குகள் கிடைத்து, சராசரி வாக்குகள் பெற்றதிலும் கடைசி ஸ்தானத்தையே பெற்றிருக்கிருர்கள்.

ஒரு கட்சி அபேட்சகர் மாற்றுக் கட்சி அபேட்சகரிடம் தோல்வியுற்ற புள்ளிவிவரத்தைப் பார்த்தாலுங்கூட, தி.மு.க. அபேட்சகர்கள் ஒரு காங்கிரஸ் அபேட்சகர்களிடமும் 2-கம்யூனிஸ்டு அபேட்சகர்களிடமும் தோல்வியுற்றிருக்கின்றனர். காங்கிரஸ் அபேட்சகர்களில் தி. மு. கழக அபேட்சகரிடம் 4 பேரும் கம்யூனிஸ்ட் கட்சி அபேட்சகர்களிடம் 2 பேரும் தோல்வி பெற்றிருக்கின்றனர். ஆனல் பரிதாபத்துக்குறிய கம்யூனிஸ்ட் கட்சி அபேட்சகர்களோ தி. மு. கழகத்தாரிடம் 4 அபேட்சகர்ரளும் காங்கிரஸ்காரர்களிடம் 6 அபேட்சகர்களும் உதை வாங்கி ஓட்டம்பிடித்ததில் மாத்திரம் முதலிடம் பெற்றிருக்கிருர்கள்.

போட்டி இருந்த 30 ஸ்தானத்தில் மிக அதிகமான ஓட்டுக்கள் பெற்று வெற்றிபெற்ற விவரத்தைப்பார்த்தாலுங்கூட. முதலாவதாக தி. மு. க. அபேட்சகர் சி. காசி 1480 வாக்குகளும் இரண்டாவதாக தி.மு.க. அபேட்சகர் எம். தங்கவேலம்மாள் 1311 வாக்குகளும் மூன்ருவதாக தி.மு.க. அபேட்சகர் கே.ஆர்; ராமலிங்கம் 1175 வாக்குகளும், நான்காவதாக தி.மு.க. அபேட்சகர் எம். எஸ். சிவசாமி 1053 வாக்குகளும் ஐந்தாவதாக, தி.மு.க. அபேட்சகர் அன்னம்மாள் 1017 வாக்குகளும் ஆருவதாக, தி. மு. க. அபேட்சகர் ஒ. வி. ராஜா 963 வாக்குகளும், எட்டாவதாக காங்கிரஸ் அபேட்சகர் ஜி.பாஞ்சோதி 941 வர்க்குகளும் இருபத்தொன்ருவதர்க, கம்யூனிஸ்ட் அபேட்சகர் எஸ். எஸ், மாணிக்கம் 718 வாக்குகளும் பெற்று வெற்றி பெற்றிருக்கின்றனர். அதிகமான வாக்குகள் பெற்று வெற்றியடைந்த வரிசையிலுங்கூட கம்யூனிஸ்டுகள் கடைசி வரிசையிலே நிற்கின்ற கண்ருவிக்காட்சியைந்தான் காண்கிருேம்.

தேர்ந்தெடுக்கப்பட்ட நகரமன்ற உறுப்பினர்கள் எண்ணிக்கையில் கம்யூனிஸ்ட் கட்சிக்கு கடைசி இடம்—சதவீதக்கணக்குப்பார்த்தாலும் கம்யூனிஸ்டுக்கு கடைசி வரிசை-மொத்தவாக்குகள் எண்ணிக்கையிலும் கம்யூனிஸ்ட்கட்சிக்கு கடைசி ஸ்தர்னம். கட்சி அபேட்சகர்கள் சராசரி பெற்ற வாக்குகளிலும் கம்யூனிஸ்ட்கட்சிக்கு [illegible] மார்க்-கட்சி அபேட்சக[illegible] தோல்விபெற்ற கணக்கைப பார்த்தாலும் கூட அதிகமான அடிபட்டவர்கள் கம்யூனிஸ்டுகள் — அதிகப்படியர்ன வாக்குகள் பெற்று வெற்றி பெற்ற பட்டியலைப்பார்த்தாலுங்கூட கடைக்கோடியில் நிற்பவர்கள் கம்யூனிஸ்டுகள் எந்தவரிசையில் எந்தக்கோணத்தில்பார்த்தாலும் கடைசிவரிசைக்கு தள்ளப்பட்ட கம்யூனிஸ்டுகள்பணத்தர்லும், ஜாதிப்பற்ருலும்பெற்ற வாக்குகளை நம்பி வீண் துள்ளு துள்ளி காங்கிரஸ் கட்சிக்கு மறைமுகமாக வெற்றி தேடித்தர வேண்டாமென வேண்டிக்கொள்வோமாக. வர்ழ்க கடமை, கண்ணியம், கட்டுப்பாடு.

தூத்துக்குடி

**-எம். எஸ். சிவசாமி**

● நாடும் வீடும் ஒளிரச்செய்யும் கலைச்சுடர்!
● கலைவானில் ஓர் புதுவெள்ளி!
● அறிவுக்கும் ஆர்வத்திற்கும் விருந்து!
● தொழிற் பயிற்சிக்கும் ஓர் வாய்ப்பு!

**தையற்கலை**

ஆசிரியர்: தையற்கலை வல்லுநர். கே. பி. சுந்தரம்

மே மாதம் முதல் திங்கள்தோறும் வெளிவரும்.

விலை 20 காசு

விவரங்கட்கு: "தையற்கலை"
132, புரசை நெடுஞ்சாலை, சென்னை-7.

**பம்பாய் மாகூல் அண்ணு படிப்பகம்**

*

16—3—59-ம் நாள் இரவு 9 மணியளவில் பம்பாய் மாகூல் எ. எல். நல்லையா அவர்கள் இல்லத்தில் அண்ணு படிப்பக அமைப்புக்கூட்டம் நடைபெற்றது. கதி. முனுசாமி செயலாளராகவும் என். டி. ரோபின் துணைசெயலாளராகவும் எ. எல், நல்லையா பொருளாளராகவும் தோழர்கள் இலட்சுமிபதி, எஸ்.கே. ஷாகுல் அமீது. தொ. து. அன்புச்செழியன், கே.வி.எஸ். மீராப்பிள்ளை பாண்டியன் ஆகியோர் செயற்குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். படிப்பகத்திற்கு இயக்கதின கிழமை, திங்கள் இதழ்களை வரவழைப்பதெனவும் படிப்பக துவக்க விழாப் பொதுக்கூட்டம் மே மாதம் நடத்துவதெனவும் முடிவு செய்யப்பட்டதும் இலட்சுமிபதி நன்றி நவில கூட்டம் இனிது முடிந்தது.

# நகரசபைத் தேர்தல் முடிவுகள்

## காங்கிரஸ் படுதோல்வி

**புதுக்கோட்டையில் கழகத்தின் சிறப்பான வெற்றி**

புதுக்கோட்டை நகரசபைத் தேர்தலில் கழகம் மகத்தான வெற்றியை ஈட்டியுள்ளது. கழகத் தோழர்கள் ஐவரும் ஆதரவு பெற்ற எழுவரும் சிறப்பான வெற்றிபெற்றுள்ளனர்.

**1-வது வார்டு :**
சண்முகம் (தி.மு.க.)

**2-வது வார்டு :**
பரசுராமன்,
[தி. மு. க. ஆதரவு]

**[illegible]-வது வார்டு :**
சுப்பிரமணியன்,
[தி. மு. க. ஆதரவு]

**6-வது வார்டு :**
ஏ. தியாகராசன்,
[தி.மு.க. ஆதரவு]

**8-வது வார்டு :**
இராமையர்,
[தி. [illegible] க. ஆதரவு]

**9-வது வார்டு :**
சி. கரு. ஆறுமுகம்,
[தி. மு. க. ஆதரவு]

**10-வது வார்டு :**
ஆசீர்வாதம் (தி.மு.க.)

**18-வது வார்டு :**
கே. வாசுதேவன்,
[தி.மு.க. ஆதரவு]

**19-வது வார்டு :**
ரெங்கசாமி (தி. மு. க.)

**21-வது வார்டு :**
ஷேக்தாவுது, (தி.மு.க.)

**23-வது வார்டு :**
கண்ணன் [தி.மு.க. ஆதரவு]

**சீரங்கம்**

சீரங்கம் நகரசபை அத்தியாயத்திலேயே காங்கிரஸ் படுதோல்வி அடைந்திருப்பது இது தான் முதல்தடவை. காங்கிரஸ் 11 இடங்களையும் கழகத்தோழர்கள் உள்ளிட்ட (சுயேச்சைகள்) 13 இடங்களையும் கைப்பற்றியுள்ளனர். இந்த 13 உறுப்பினர்களில் கழக உறுப்பினர்கள் சுயேச்சையாக நின்று 5 இடங்களில் வெற்றிபெற்றுள்ளனர்:—

**2-வது வார்டு :**
பி. நாகமுத்து

**7-வது வார்டு :**
மா. சுந்தரராசு

**8-வது வார்டு :**
வி. சீனிவர்சன்

**13-வது வார்டு :**
தா. அப்பாவு

**14-வது வார்டு :**
டி. துரைசாமி

**மன்னார்குடி**

மன்னார்குடி நகரசபைத் தேர்தலில் கழகத்தோழர் ஒருவரும் ஆதரவுபெற்ற இருவரும் வெற்றி பெற்றுள்ளனர்.

**8-வது வார்டு :**
எம். அ. அப்துல்வகாப்
(கழக சுயேச்சை)

**10-வது வார்டு :**
எம். ருக்மணி (கழக ஆதரவு)
(பெண்கள் தொகுதி)

**18-வது வார்டு :**
எஸ். ராசகோபால்
(கழக ஆதரவு)

**ஆரணியில் இரு தோழர்கள் வெற்றி**

(வ.ஆ) ஆரணியில் நடைபெற்ற நகரசபைத் தேர்தலில் இரண்டு இடங்களில் காங்கிரஸ் அபேட்சகர்களை முறியடித்து வெற்றி பெற்றுள்ளனர்.

**1-வது வார்டு :**
ஏ. காசிநாதன்

**4-வது வார்டு :**
[illegible]

[illegible]

சொற்பயிற்சி [illegible]

●

13—3—59 இரவு 10மணியளவில் கிளையின் பணிமனையில் தோழர். எம்.எ. நெடுஞ்செழியன அவர்களின் தலைமையின் கீழ் கூடியது!

அதுபோது திராவிடநாடு என்ற தலைப்பின் கீழ் வேம்பை கார்வண்ணன் சேனை அன்பழகன், வெள்ளை கருணநிதி, சிற்றுளி சிதம்பரம், கருத்து சேவியர், மரியதாசன். ரட்டணம் ஆகியோர் பேசினர்.

தென்னாட்டில் சினிமாக்குழுவினர்களை வாயில் வந்தபடி திட்டித்திரியும் வடநாட்டு ஐ. எஸ். ஜோகரை வன்மையாக கண்டித்தும் உடன் ஒழுங்கை முதலில் கற்றுக்கொள்ளும்படி அவரை கேட்டுக்கொண்டும் தென்னக மக்கள் இனிமேல் இந்தி படங்களைப்பார்க்கவேண்டாமென மன்றம் தாழ்மையுடன் கேட்டுக்கொண்டும் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

தலைவர் தெளிவுரை கூறியதும் செயலாளர் சேரை இராசகோபால் நன்றிநவில மன்ற பயிற்சி கூட்டம் இரவு 3 மணிக்கு இனிதுமுடிவுற்றது.

# கேள்வி பதில்

டி. ஆர். ரங்கநாதன், மதுரை.

**நடிகர்களுக்கு அரசியல் தேவையில்லையா?**

ப: நடிகர்கள் சோற்றுலடித்த பிண்டங்கள் அல்ல. நாடகத்துறை மூலம் சமுதாய உயர்வுக்கும், நல்லாட்சிக்குமான கருத்துக்களை பரப்பக்கூடிய சக்திவாய்ந்தவர்கள், அவ்விதம்செயலாற்றவேண்டிய கடமைப் பட்டவர்கள். பஜனை மடங்களில் இருப்பவர்களெல்லாம்கூட (பாலிடிக்ஸ்) அரசியல் பேசும் இந்நாளில், நடிகர்கள் என்றால் சொகுசான வாழ்வு நடத்திவிட்டுப் போகவேண்டியவர்கள் என்று சொல்லுவது அறிவுடமையாகாது. நடிகர்கள் பொதுவாழ்வில் — அரசியல் துறையில் ஈடுபடக்கூடாது என்று 'வாதம்' [illegible]பவர்கள், நடிகர்களை மரக்கட்டை[illegible] மிகச்சாமான்யர்களாக கருதி[illegible] இருமாப்பு படைத்தவர்கள் [illegible] அழுத்தந்திருத்தமாகச் கூறுவேன்.

★

சி. ஆறுமுகம், வடசென்னை.

**குறிப்பாக வடநாட்டிலும், பொதுவாக அங்குமிங்குமாக மாணவர்களிடம் கட்டுப்பாடு குறையவும், கல்லூரிகளில் அடிக்கடி அசம்பாவிதங்கள் நடக்கவும் காரணம் யார்?**

காங்கிரஸ்அமைச்சர்களின் விவேகமற்ற பேச்சுக்களும், நேர்மையற்ற போக்குமேயாகும்.

★

எஸ். கலைத்தம்பி, பேராவூரணி

**(1) நெருக்கடியான கட்டத்தில் தான் நேதாஜி இந்தியா வருவார் என்று தோழர் முத்துராமலிங்கத்தேவர் கூறுகிறரே, இப்போதுள்ளதைப்போல நெருக்கடிகளைத்தீர்க்க வராமல் எப்போதுதான் வருவார் நேதாஜி?**

நேதாஜிபோஸ், நடு இரவில் வந்து காட்டில் சந்தித்து தம்முடன் சாப்பிட்டுவிட்டுப் போவதாகவும் ஆதலாலே இரண்டு இலைகளும் அதற்கான உணவு வகைகளையும் எடுத்துக் கொண்டு சில சமயங்களில் முத்துராமலிங்கனர் காட்டுப்பக்கம் போவதாகவும் சொல்லப்படுகிறது. ஆகவே நேதாஜி இதோ வருகிறர், அதோ வந்துக் கொண்டிருக்கிறர் என்று தோழர் முத்துராமலிங்கனர் சொல்வதை நாட்டில் நடைபெறும் பல வேடிக்கைகளில் இதையும் சேர்த்துக் கொள்ளுங்களேன்.

★

**(2) நாகர்கோவில் மாநாட்டிற்கு பிறகு அண்ணு அவர்கள் ராஜாஜியைச் சந்தித்து தமிழ்நாடு தனியாக பிரியப் பாடுபடுவோம் என்று அழைத்ததாகவும் திராவிடநாட்டுப் பிரிவினையில் அண்ணுதுரைக்கு நம்பிக்கையில்லை யென்றும் தோழர் ம.பொ. சிவஞானம் கூறுகிறரே உண்மையா?**

"அண்டர்கிரவுண்ட்" கட்சிக்காரர்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ள தோழர், சிவஞானம் அண்டப்புளுகராக மாறி வருவதில் ஆச்சரியமில்லையே!

★

எஸ். கேசவன் தஞ்சை.

**பெரியார் ஈ. வே. ராமசாமி அவர்களுக்குப்பிறகு திராவிடர் கழகத்துக்கு யார் தலைவராக வருவார்கள்?**

அவ்வித தகுதிக்குரியவர்கள் ஒருவர்கூட இல்லையென பெரியார் அவர்கள் மனவேதனையுடன் அறிக்கை வெளியிட்டிருந்தாரே உங்களுக்குத் தெரியாதா?

★

- அஞ்சாநெஞ்சன்


திராவிடத்தின் மறுமலர்ச்சிதான் !

**மக்களாட்சி**

ஆசிரியர் : இளமுருகு பொற்செல்வி

{ நீங்கள் படித்து விட்டீர்களா ?
{ விமர்சனத் தொடர் கட்டுரை }

**தறுதலையா? தமிழ்வாணனு?**

மற்றும்பல. : : விலை காசு 8

சிறப்பு ஆசிரியர் : கரூர் மு. குழந்தைவேல்

" மக்களாட்சி " குழித்தலை, திருச்சி.

# உத்திரபிரதேச காங்கிரசில் சர்வாதிகாரம்

கடந்த சில மாதங்களாக உத்தர பிரதேச காங்கிரசில், உள்கட்சி சண்டை வளர்ந்து, அரசியலையே ஆபாசமாக்கிவிட்டது. சமீப காலத்தில்காங்கிரஸ்காரர்களும்காங்கிரஸ் தலைவர்களும்உறுப்பினர்களை சேர்க்கும் தீவிரப்போராட்டத்தில் ஈடுபட்டிருக்கின்றனர். இது போன்ற தீவிரமான படையெடுப்பை இதற்கு முந்திய பல ஆண்டுகளில் கண்டதில்லை. காங்கிரஸ் கொள்கைகளை பரப்ப வேண்டுமென்ற சமய உணர்ச்சியுடன் இந்த உற்சாகம் தோன்றவில்லை. மாருக கட்சிக்குள்ளிருக்கும் ஒவ்வொரு கூட்டத்தினரும் காங்கிரஸ் நிர்வாகத்தைக் கைப்பற்றவும் அதன் மூலம் அரசாங்கத்தைப் பிடித்துக்கொள்ளவுமே இவ்வெழுச்சித்தோன்றியுள்ளது

### தீவிரவேலைகள்

இப்போராட்டம் இது வரை சாதித்ததென்ன...? ஐந்து லட்சத்திற்கு மேற்பட்ட ஆண்களும் பெண்களும் உறுப்பினர்களாக்கப்பட்டிருக்கின்றனர். அவர்களில் நூற்றுக்கு தொண்ணூற்றைந்து பேர் போலி உறுப்பினர்களே உறுப்பினர்களைச் சேர்ப்பதற்குப்பதிலாக காங்கிரஸ் ஆட்சியால் கொள்ளைலாபம் அடிப்பவர்களிடமிருந்து ஏராளமான பணம் பெறப்பட்டதாகவும், அவைகளை உறுப்பினர்களின் சந்தாக்களாகப் பயன்படுத்தியதாகவும் அறிவிக்கப்படுகிறது. இவ்வாறு ஒவ்வொரு ஆயிரம்ரூபாய் நன்கொடை வசூலும், நாலாயிரம் பேர்களை உறுப்பினர்களாக்க. ஒவ்வொரு கோஷ்டிக்காரர்களாலும் பயன்படுத்தப்படுகிறது. காங்கிரஸ் அமைப்பிலோ சட்டசபையிலோ அரசாங்கத்திலோ ஏதேனும் ஒரு இடத்தைப் பிடித்துக்கொண்ட ஒவ்வொரு காங்கிரஸ்காரனும் தனனுடைய கோஷ்டிக்குஉறுப்பினர்களைச்சேர்க்கும் வேலையையே கட்சிக்கு செய்ய வேண்டிய தன் பணியாகக் கொள்கிருன்.

ஒரு நகரத்திலுள்ள காங்கிரஸ் ஆதரவாளர்கள் எல்லாம் பொருளாதார ரீதியில், காங்கிரஸ் உறுப்பினர்கள் சேர்க்கும் பணிக்கு தங்களால் இயன்ற அளவு, பணி செய்கின்றனர், பணம் வசூலிக்கப்பட்டு விட்டால் உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பது மிக எளிது இப்படி சேர்க்கப்படும், ஒவ்வொரு உறுப்பினரும் கட்சியில் உண்மை ஊழியராக இருக்கவேண்டும் என்கிற அவசியம் இல்லை. உண்மையான ஊழியர்களை நேர்மையான முறையில் சேர்க்கவேண்டு மென்கிற முயற்சியும் ஒரு சிலரால் நடத்தப்படுகிறது. எனினும் முன்னதோடு பின்னதை ஒப்பிட்டால், பின்னது குறிப்பிடத்தகுந்த நிலையில் இல்லை.

காங்கிரசுக்கட்சியில் சாதாரண உறுப்பினர் பதவி, மண்டலக் காங்கிரசில் ஒரு கோஷ்டியின் அதிகாரத்தை நிலைநாட்டவும், அதன் மூலம் மாவட்ட நகர, பிரதேசக் குழுக்களை ஆட்டிப்படைக்கவும் வழிவகை செய்கிறது. மண்டலக் குழுவில் பெரும்பான்மையினரின் ஆதரவு பெற்ற ஒரு கோஷ்டி தாஞகவே மற்றயகுழுக்களில் பெரும்பான்மை அடைந்து விடுகிறது. போலி உறுப்பினர்களின் எண்ணிக்கையைப் பெருக்குவதற்கான காரணம் இதுவே.

### பலப்பரிட்சை

உறுப்பினர் சேர்க்கும் போராட்டத்தில், மாநில காங்கிரஸில் இரண்டு கோஷ்டிகளுக்கிடையே பலப்பரிட்சை நடந்தது. இந்தப்பரிட்சையில் மந்திரிகளின் கோஷ்டி, காங்கிரசின் மத்திய பீடத்தலைவரின் ஆதரவால், வெற்றி பெற்றது. உத்தரப்பிரதேசம் சம்பந்தப்பட்டவரை மத்திய பீடத்தலைமையின் வழிகாட்டியாக இருந்தவர். பண்டிதவல்லபபந்த் ஆவார்.

மாஜி, உணவு சிவில்சப்ளையாக சி. பி. குப்தாவின் கோஷ்டியை சமீப காலத்தில் தோற்கடித்த கோஷ்டி பண்டித பந்தின தலைவராகக் கொண்டது. இதுஇரண்டாவது பெரியசவால்; முதல் சவால், 1957 டிசம்பரில், பிரதேச காங்கிரசை, குப்தாவின் கோஷ்டிகள் பயமுறுத்திக் கொண்டிருந்ததேயாம். பிறகு பண்டிதபந்த் தானும் உ. பி. முதல் அமைச்சர் திரு. சம்பூரண ஆனந்தும், காங்கிஸ் செயற் குழுவை நியமிக்கும் அதிகாரத்தைப் பெருவிட்டால், செயற்குழுவில் தங்களால் எதையும் செய்ய முடியாது என வற்புறுத்திஞர்கள், பண்டிதபந்த் இல்லாத, செயற்குழு, என்ருல், அது கற்பனையில் கூட உருவாக முடியாத நிலை பண்டிதபந்த் உதறித்தள்ளப்பட்டால் காங்கிரஸ் வேலைக்குழு, தேர்தலையே கெடுத்துவிடும் என்றபயம் இருந்தது. ஆகவே பண்டிதபந்தும் திரு சம்பூர்ண ஆனந்தும், செயற்குழு உறுப்பினர்களை நியமிக்கும் அதிகாரத்தைப்பெற்றனர். தேர்தல் மூலமே தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்ற ஜனநாகத்தத்துவம் உதறித்தள்ளப்பட்து. மேலிடமோ பண்டித பந்தின் தேவையை உணர்ந்து அவரைச் சார்ந்திருக்கிறது, ஆகவே ஜனநாயகக் கொலைக்கு மேலிடம் எதிர்ப்பு தெரிவிக்கவில்லை.

நியமிக்கப்பட்ட செயற்குழுவில் குப்தா கோஷ்டியினர் சிறுபான்மையினராக்கப்பட்டனர் உ. பி. காங்கிரஸ் குழு கூடிய நேரத்தில், தேர்தல் வேண்டுமென்று குப்தாவின் கோஷ்டியினர் குரலெழுப்பினர். இரு தலைவர்களால் நியமிக்கப்படும் செயற்குழு பிரதேசக் குழுவைப்பிரதிபலிப்பதாகாது என வாதிட்டனர் இந்த வாதம் ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஆனுல் பிரதேசக்குழுக் கூட்டத்தில் கலந்து கொண்ட பெரும்பான்மையான உறுப்பினர்கள் தங்களைப்பாதுகாத்துக் கொள்ளவிரும்பினர். அவர்களில் பலர் வருங்காலத்தில் தங்கள் வாழ்வுப்பாதையை லாபகரமான வழியில் செலுத்த ஆசைப்பட்டுக்கொண்டிருப்பவர்கள், பண்டிதபந்தின் தயவால் அவர்கள் சட்டசபைத் தேர்தலுக்கு காங்கிரஸ் டிக்கட்டுபெற்றவர்கள். அல்லது மோசமாகப்போய்க்கொண்டிருப்பதை உணர்ந்த குப்தா கோஷ்டியினர் அமைதியாகப் பணிந்து விட்டனர். மீண்டும் மந்திரிகளின் கோஷ்டி வெற்றிக் கொடி நாட்டியது.

### வாணம்

உறுப்பினர் சேர்க்கும் போர் வாணம் விடப்பட்டது.மந்திரிகள் கோஷ்டியின் கவலையற்றபோக்கு தான், அதன் செல்வாக்கை காங்கிரஸ் கமிட்டியிலும் சட்டசபை காங்கிரஸ் அமைப்பிலும், இழந்ததற்கு காரணம். ஆகவே மந்திரிகள் தங்கள் செல்வாக்கை வலுப்படுத்த வேண்டுமென எண்ணினர்; முழுமூச்சுடன் உறுப்பினர் சேர்க்கும் "வியாபாரத்தில்' ஈடுபட்டனர். குப்தா கோஷ்டியினரின் இரண்டாவது தோல்வி வரை கட்சி சண்டையில் கலக்காத சம்பூரண ஆனந்த், அதற்குப்பின் பண்டிதபந்திஞல் தூண்டப்பட்டு அவர் வசமாஞர் அதன்படி அவரும் அரசியல் வானில் தன்னுடைய வாணத்தைவிட்டு தன்னுடைய கோஷ்டி ஒன்றை ஏற்படுத்திஞர்.

தற்போதைய மந்திரிகள் கோஷ்டி இரண்டு கோஷ்டிகளின் சேர்க்கையாகும்; ஒன்று தற்போதைய கல்வி மந்திரி திரு. கமலாபதி திருப்பதியின் கோஷ்டியும் மற்ருென்று திரு. மோகன்லால் கௌதமின் கேரஷ்டியுமாகும். இந்த இரண்டு மந்திரி கோஷ்டிகளும் ஒன்று சேர்வதற்கு முன்ஞல், உ. பி. காங்கிரஸில் இவர்கள் சிறுபான்மையினராக இருந்தனர். மத்திய பார்லி மெண்டரி [illegible]ரஸ் வேலைக்குழு[illegible]ளுடைய ஆதரவைக் [illegible]டுக்குமுன்பு இவர்கள் அநாமதேயங்களே.

வருமான மந்திரி திரு. சரன் சிங்கால் நடத்தப்படும் கோஷ்டி ஒன்றும் உள்ளது. முன்பு இந்த கோஷ்டி மந்திரிகளின் கோஷ்டியை ஆதரித்தது. இப்பொழுது, குப்தா கோஷ்டியுடன் சேர்ந்து கொண்டதாக அறிவிக்கப்படுகிறது.

### சனநாயகம் ஒதுங்கி நிற்கிறது.

பிரதேச காங்கிரசின் செயல் முறைகளில் ஜனநாயகம் கீழ்த்தரமான நிலைக்கு தள்ளப்பட்டு விட்டது. முதலில் தேர்தலுக்குப்பதிலாக 'நியமனம்' புகுத்தப்பட்டது. பிரதேச காங்கிரசின் 600 உறுப்பினர்களிடமும் இருக்கவேண்டிய அதிகாரங்கள் அத்தனையையும் 'இரண்டு மனிதர்கள்' பறித்துக் கொண்டார்கள். பிறகு ஜனநாயக எண்ணங்கள் மீண்டும் உயிர்த்தெழ ஆரம்பித்து தேர்தல் வேண்டுமென்ற முழக்கங்கள் கேட்டதும், உ. பி. முதலமைச்சர் தன்னுடைய காபினெட் தோழர்களை அழைத்து நியமனம் செய்யும் முறையே இருக்க வேண்டுமென்றும், தேர்தல் வேண்டுமென்ற குழுவினர்களுடன் அவர்களும் சேர்ந்து புதிய செயற்குழுவை நியமன மூலமாக அன்றி தேர்தல் மூலம் அமைக்கத்திட்டமிட்டால், அவர்கள் தன்னுடைய நம்பிக்கைக்குப் பாத்திரமானர்களாகக் கருதப்பட மாட்டார்கள் என்றும் தெரிவித்தார்.

ஆளப்பிறந்தது காங்கிரஸ் !

அசைக்க முடியாது அதன் வலிமையை !!

ஜனநாயகம் தந்தது காங்[illegible]

ஓட்டுரிமையைக் கொ[illegible]

—என்று குரல்வளை [illegible] காரர்களே ! உங்கள் காங்[illegible]ர யோக்கியதையைப் பாரீர் !

உள்நாட்டு மந்திரி பந்த் செய்யும் ஜனநாயகக் கொலையைக் காணீர் !

ஓட்டுப்போடவும் உரிமையில்லாத காங்கிரஸ் உறுப்பினர்களைப் பாரீர் !!

—கேரவன்தரும் படப்பிடிப்பு பாரீர் !!!

(CARAVAN)

மூலம் :

**'கேரவன்'**

மொழி பெயர்ப்பு :

**கடவுள் தலைவன்**

# முரசு முழக்கு தமிழா !

முரசு முழக்கு தமிழா !—வடநாட்
டுறவும் அறவே—திராவிட
அரசும் பெறவே
முரசு முழக்கு தமிழா...

(உடன் எடுப்பு)

புறமும் அகமும் ஒன்ருய்ப் பொருந்தி—நச்
சரவு நிகர்கொடும் இந்தி எரிக்க
முரசு முழக்கு தமிழா !...

(அடிகள்)

எண்ணிலும் இந்தி பண்ணிலும் இந்தி
எண்ணிடும் பணத்தின் எழுத்திலும் இந்தி
விண்ணில் மிதந்திடு வானெலி இந்தி
என்றிடு நிலையினைக் கொன்றிட முந்தி
முரசு முழக்கு தமிழா !...

அஞ்ச லட்டையில் வஞ்சக இந்தி
மிஞ்சும் திரைப்படச் செய்தியில் இந்தி
பஞ்சு உளத்திலும் பதிக்கிருர் இந்தி
நெஞ்சம் கொதிக்குது உயிரினைச் சிந்தி
முரசு முழக்கு தமிழா !...

உறுதி உறுதியே உளத்தினில் கொண்டே
இறுதி இறுதியே இந்திக் கென்றே
[illegible]றனும் உரமும் அறிவா[illegible]
சிறுமை வடவரை இந்தியை வென்று
முரசு முழக்கு தமிழா !...

திறமை மிகுந்த மறவராம் சிறுத்தையே
வரிப்புலி வீரம் உளத்தினில் பொருத்தி
திருநிகர் தாய்நாட் டடிமை வுறுத்தே
வறுமை வொடுக்கிட வஞ்சரை நொறுக்கிட
முரசு முழக்கு தமிழா !...

-ரவி

பிரதேச காங்கிரஸ் குழு கூட்டத்தில் பண்டித பந்த், நியமன முறை நேர்மையானதே யென்றும் ஏனெனில் நியமிக்கப்பட்டவர்களை செயற்குழு ஆதரபூர்வமாக அங்கிகாரம் செய்கிறது என்றும் கூறினுர். விமர்சகர்கள், திரு. சம்பூர்ணஆனந்தை அணுகி, கேபினெட் உறுப்பினர்களை ஜனநாயகத்துக்குப் புறம்பான முறையில் செல்லும்படிவற்புறுத்துவது எப்படி நியாயம் என்றும், காங்கிரஸ் கூட்டத்தில் சுதந்தரமாகப் பேசும் உரிமைக்கு விலங்கிடுவது நியாயம் தானு என்றும் கேட்டதற்கு, அந்தப் பிரச்சினை அரசாங்கத்தின் கௌரவத்தோடு இணைக்கப்பட்டிருப்பதாக அவர் கருதுவதாகப் பதில் கூறப்பட்டது. இந்தக் கருத்தின் விளைவால் சம்பூர்ணனந்தின் சர்க்காரில் 9 பேர் ராஜிநாமா செய்ய நேரிட்டது.

உ. பி, காங்கிரஸ் அமைப்பில் இவ்வாருக ஜனநாயக தத்துவம் படிப்படியாக மறைந்து ஒரு சிலரின் அதிகாரம் வளர்ந்து வருகிறது என்று சொல்வது மிகப் பொருத்தமே.

### சீரழியும் செல்வாக்கு

காங்கிரஸ் தன்னுடைய செல்வாக்கை இழந்து கொண்டிருக்கும் இராச்சியங்களில் உ. பி.யும் ஒன்ருகும் ஜனநாயகம் வாழ்கின்ற வரை எந்த கட்சி ஆண்டாலும் கவலையில்லை. ஆனுல் பிரச்சினையை அலசி ஆராய்வதற்காக, காங்கிரஸ் அழிவுப்பாதையை நோக்கிப்போய்கொண்டிருப்பதற்கான, காரணங்களை அறியவேண்டியதிருக்கிறது.

உ. பி.யின் முதலமைச்சராக பண்டித பந்த் இருந்த காலத்தில், சட்டசபை மேல்சபை பாராளுமன்றங்களுக்கான நல்ல காங்கிரஸ் அபேட்சகர்களுக்கான நல்ல காங்கிரஸ் அபேட்சகர்ளும் பந்தின் தயவை நாடினர் அதற்குக் காரணம், பாராளுமன்றம் அல்லது சட்டசபையிலிருக்கிறஉறுப்பினர்களால் காங்கிரஸ் டிக்கட்டுகளைப்பெற இயலாதிருந்ததே. தொகுதியில் எந்தவித உருப்படியாகச் செய்யாமல், பூஜாமனேபாவத்துடன் தனிப்பட்ட ஒருவரின் தயவை எதிர்பார்ப்பது தேர்தலுக்கு வழிவகுத்துக்கொடுத்தது. தங்கள் தொகுதிகளில் எந்த அடிப்படைச் செல்வாக்குமின்றியே அவர்கள் வெற்றி பெற்றதற்கு காரணம், ஏறக்குறைய முக்கால் நூற்ருண்டாக காங்கிரஸ் செல்வாக்கு அங்கு வேரூன்றியிருந்ததேயாகும். மோசமான நிர்வாகமும், வளர்கின்ற லஞ்சமும் ஊழலும் காங்கிரஸின் செல்வாக்கை சீரழியச் செய்துகொண்டிருக்கின்றன. பொதுவாக, ஜனநாயக நாட்டில் ஒரு கட்சி தன் அபேட்சகரைத் தேர்ந்தெடுக்கும்போது, அவர் செய்த சேவைகளையும் அந்த தொகுதியில் அவருக்கு இருக்கும் கட்சி செல்வாக்கையும் அடிப்படையாக வைத்துத்தான், தேர்ந்தெடுக்கும். மேலிடத்து தலைவர்களின் உதவி அங்கு தேவைப்படாது. ஆனுல் உ. பி. யில் சிபாரிசு தலைவர்களுக்கும் தயவும்தான் மதிப்பிடப்படுகின்றன.

கடந்த பொதுத்தேர்தலில் உ. பி. சட்டசபையில், காங்கிரஸ் மற்ருெரு நூறு இடங்களை இழந்தது.

தேர்தலுக்கு அபேட்சகர்களை ஜனநாயக முறைப்படியே தேர்ந்தெடுக்க வேண்டுமென்ற ஜனநாயக முறையை எண்ணிப்பார்க்கும் காலம் வந்துவிட்டது. என்பதைத்தெரிவிக்கும் எச்சரிக்கையாக இது காங்கிரசுக்கு இருந்திருக்கும் ஆனுல் 'காக்கா'ப்பிடிப்பதின் மூலமே, காங்கிரஸ் அமைப்பிலும், சட்டசபையிலுமே, அரசாங்கத்திலும் ஏதேனும் ஒரு நல்ல இடத்தைப்பிடித்துக் கொள்ளலாம் என்றே காங்கிரஸ்காரர்கள் இன்னும் நினைக்கின்றனர்.

### வாயடைப்பு

ஜனநாயகத்திற்குப் புறம்பான நியமனமுறை செயல்படுத்தப்படும் முன்பு, அந்தந்த மாவட்டங்களிலுள்ள காங்கிரஸ்காரர்கள், நிர்வாகம் எப்பொழுதேனும் எங்கேனும் தவருன வழியில் செல்கையில், அதை விமர்சனம் செய்புமளவுக்கு சுதந்தரமுடனிருந்தவர்கள் அத்தகையதோர் விமர்சனம் தவறைத் திருத்தும் கருவியாகப் பயன் பட்டது, ஆனுல், இப்பொழுது, நியமிக்கப்பட்ட மாகாண காங்கிரஸ் தலைவர், தன்னை நியமித்தவர்களுக்கு அதிகாரத்தை வழங்குகிருரே தவிர (மாவட்ட) காங்கிரஸ் குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளாக பிரதேச காங்கிரசில் வீற்றிருக்கும் உறுப்பினர்களுக்கு அல்ல. முதலமைச்சரிடமிருந்து தலையசைப்பை பெற்று, மாநில காங்கிரசு குழுவுக்கு வாயடைப்புச் சட்டத்தை தலைவர் போடுகிருர். கடந்த ஆண்டு காங்கிரஸ் தலைவர் தேபர் நல்ல முறையில் காங்கிரஸ் அரசாங்கத்தை விமரிசனம் செய்து ஆக்க வழியில் செலுத்த, காங்கிரஸ் காரர்களுக்கு சுதந்திரம் வழங்கப்பட வேண்டுமென்று யோசனை கூறினுர். உ. பி.யில் இந்த சுதந்திரம் அற்பாயசாகப் போய்விட்டது. முதலமைச்சர் மாவட்டங்களில் சுற்றுப்பயணம் செய்யும் போது கூட அதிகம்பேசக் கூடாதென்ற வாய்ப்பூட்டுக்குச் சட்டம் மாநிலக் காங்கிரஸ் தலைவரால் போடப்பட்டது.

மண்டலக்குழுக்களை அமைப்பதன் மூலம் மீண்டும் காங்கிரஸ் புத்துயிர்பெறும் என நகரங்களில் பொதுமக்கள் எண்ணுகின்றனர். இந்த எண்ணம் பழைய காங்கிரஸ் தலைவர் தேபரால் உண்டாக்கப்பட்டது. காங்கிரஸை வலுப்படுத்திய பெருமை தன்னையேசாரும் எண்ணத்துடன் அவர்தன பதவியை விட்டு நீங்கினுர். ஆனுல் உ.பி.யிலுள்ள மண்டல காங்கிரஸ் குழுக்களை ஆராய்ந்து பார்த்தால், மேற்குறிப்பிட்ட எண்ணம் தவருனது எனத்தெரியும் காங்கிரஸ் அமைப்பின் சட்டப்படி சாதாரண உறுப்பினர்கள் கூடி, மண்டலக் காங்கிரஸ் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பார்கள், ஆனுல், மண்டலத்திலுள்ள சாதாரண உறுப்பினர்கள் தாங்கள் உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டிருக்கிருர்கள் என்பதையே அறியார்கள் ஏனெனில், அவர்கள் பெயர் காங்கிரஸ் உறுப்பினர்களாகச்சேர்க்கப்படுகிறது. உறுப்பினருக்குக்குரிய கட்டணத்தொகைகளும் அவர்களை அறியாமலேயே பிறரால் கட்டப்படுகின்றன. தேர்தல் கூட்டங்களில் அவர்களை அழைப்பதுமில்லை; பங்கு கொள்ளுமாறு கேட்பதுமில்லை. இவர்களையெல்லாம் உறுப்பினர்களாகப்பதிவு செய்தவர் அந்த உறுப்பினர் பட்டியலை தன் கையிலேயே வைத்திருக்கிருர். அவர்களுடைய வாக்குரிமையை தன்னுடைய "டீமு" (Team)க்கு அளிக்கிருர். இப்படி தனக்குத்தாருகவே நியமிக்கப்படுகின்ற மனிதர்கள், மாநில காங்கிரசுக்கும் பிரதேச காங்கிரஸ் குழுவுக்கும் வாக்குரிமை சீட்டைப்போடுகின்றர்.

எதிர்க்கட்சிகள் நாடுநகரங்களிலும் பட்டித் தொட்டிகளிலும் மக்களுடன் நெருங்கிப் பழகாமலிருப்பதும் நல்லதோர் சூழ்நிலையை உருவாக்கி காங்கிரஸ்[illegible]க்கு அடுத்தபடி ஆளும் தன்[illegible] பெறத்தக்கக் நிலையில் இ[illegible]தது, இந்த நாட்டின் துரதிருஷ்டமே.

### பிறப்பு

28—2—59 அன்று காலை 5 மணியளவில் வேலூர், சைதாப்பேட்டை தி.மு.க. கிளைக் கழகத்தின் துணைச்செயலாளர் சி. ஆர். புரட்சிபாபு அவர்களின் துணைவியார் ஒரு ஆண்மகனை ஈன்றெடுத்தார் தாயும் சேயும் நலம்.

1-ம் பக்கத் தொடர்ச்சி............

உயரிய தாயக விடுதலையேதனது முக்கிய கொள்கை என்ற உறுதிப்பாடுடன் பணியாற்றி வருகிறது தி.மு. கழகம்.

ஆகவே தாங்கள் காங்கிரசுக்கு ஆதரவு தாருங்கள் என்று அறிக்கைவிடுவதும்,பேசுவதும் தங்களின்முரண்பட்ட செயலையெடுத்து காட்டுவதாகயிருக்கும் என்பதுடன், வடநாட்டிலுள்ள முற்போக்கு எண்ணம் கொண்டவர்களை, தங்களது பணியினைப் பற்றியும் கொள்கையைப்பற்றி ஐயப்பாடு கொள்ளச் செய்யும் என்பதைப் பணிவன்புடன் சுட்டிக்காட்டவே இம்மடலைத் தீட்டுகிறேன்.

கடந்த 15 ஆண்டுகளுக்குமுன் வடநாடு சென்று ஜனாப் ஜின்னா டாக்டர் அம்பேத்கார் ஆகிய தலைவர்களுடன் பேச்சு வார்த்தை நடத்தி வடநாட்டிலுள்ள முற்போக்காளர் ஆதரவையும் நம் தாயக விடுதலைப் பிரச்சினைக்காக பெற்றுவந்த தாங்கள், அதே நிலையில் நின்று செயலாற்றாமற் போனதால், நமது இயக்கம் அடையவேண்டிய வெற்றியும், தாயக விடுதலையும் சீர்குலைந்துவிட்டதை அய்யா அவர்களின்மனசாட்சி அறியும் என்று நம்புகிறேன்

எனவே திராவிட முன்னேற்றக்கழகத்தின் மீதுள்ள கோபத்தால் நம் தாயகத்தின் உரிமைப் பிரச்சினையையும், அதற்கு நாட்டிலே வளர்ந்துவரும் பொதுவான சக்தியையும் சீர்குலையச் செய்ய வேண்டாம் என்று வேண்டிக் கொள்கிறேன்.

தி. மு. கழகத்தினர் சட்டமன்றம் அல்லது நகரசபைகளில் இடம் பெறுவது தங்களுக்கு விருப்பமில்லையெனில் திராவிடர் கழகத்தினர் ஆளும்வர்க்கத்தின் அநீதியை எதிர்க்க, தேர்தலில் போட்டியிடட்டும், நாங்கள் தேர்தலுக்கே நிற்பதில்லை. அத்துடன் திராவிடர் கழகத்தின் வெற்றிக்கு பணியாற்றுகிறோம் என்று அண்ணா அவர்கள் பல முறை சொல்லியிருக்கிறார்கள்.

ஆகவே தி. மு. கழகத்தின் மீதுள்ள கோபத்தினால் தி. மு. கழகத்திற்கும் திராவிடர் கழகத்திற்கும் பொதுவாக திராவிட இயக்கத்தின் மகத்தான சக்தியைத் திரைமறைவில் நின்று அழித்துவிடலாம் என்று "கத்தியை" (அடக்குமுறையை) தீட்டிவைத்துக் கொண்டிருக்கும் காங்கிரஸ் ஏகாதிபத்தியத்திற்குத் துணைபோகாதீர்கள், என்று வணக்கத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்புள்ள,

— சுஉத்தரசன்


மார்ச் 27௳ முதல்

தமிழ்நாடெங்கும்

T.V.S. புரொடக்ஷன்ஸ்

# சொல்லு தம்பி சொல்லு

சங்கீதம்... K.V. மஹாதேவன்

டைரக்ஷன்... T.V. சுந்தரம்

ஸ்டுடியோ மெரிலாண்ட்

ART & PUBLICITY...

விநியோகஸ்தர்கள் : * வடஆற்காடு, தென் ஆற்காடு, செங்கல்பட்டு & சித்தூர் ஜில்லாக்கள் : அமராபிக்சர்ஸ், பாண்டிச்சேரி : * மதுரை, ராமநாதபுரம், திருநெல்வேலி & மைசூர் ராஜ்யம் : ராயல் டாக்கி டிஸ்ட்ரிபியூட்டர்ஸ் : மதுரை, * தஞ்சாவூர், திருச்சி, புதுக்கோட்டை உள்பட : ராக்ஸிபிக்சர்ஸ், திருச்சி: *கோயமுத்தூர் & நீலகிரி : கரூர் ஜெய்ஹிந்த பிச்சர்ஸ் கோயம்புத்தூர்; * சேலம் : எம்.ஏ.வி.பிக்சர்ஸ், சேலம்; *கேரளா : குமாரசாமி & கோ, திருவனந்தபுரம்; சிலோன் : திவிடி தியேட்டர்ஸ் (பி) லிட்., திருவனந்தபுரம் ; * எப். எம். எஸ். ஷா பிரதர்ஸ்,சிங்கப்பூர்.

இதர பிரதேசங்களுக்கு விண்ணப்பிக்கவும் :— டி. வி. எஸ். புரொடக்ஷன்ஸ்,

(போன் : 61839) 115 வெள்ளாளத் தெரு, — புரசைவாக்கம் — சென்னை-7.


ஆசிரியர் அச்சிடுபவர், வெளியிடுபவர்: என். வி. நடராசன், சோமு அச்சகம், 16/17திருநாவுக்கரசு முதலி தெரு, பெரம்பூர், சென்னை-11.